# யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனை இயக்கம்

**திருச்செல்வம் திவாகர்,[1] சிவசுப்பிரமணியம் ரகுராம்[2]**

[1]ஊடகக் கற்கைகள் அலகு , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
[2]ஊடகக் கற்கைகள் அலகு , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
*thivathiru3@gmail.com,[1] ragunadu2003@yahoo.com[2]*

**ஆய்வுச்சுருகம் -** யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனை அல்லது திரைப்பட நுகர்வு என்பது பல்வேறு தளங்களில் பல்வேறு வகைகளில் வளர்ந்து வந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனையின் பல்பரிமாணங்கள், அதில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பன சிக்கலான விடயங்களாகக் காணப்படுகின்றன. இவற்றை இனங்காண்பதை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. திரைப்பட இரசனை என்பது நீண்ட கால நோக்கில் ஆராயப்பட வேண்டிய ஒன்றாக அமைவதால் பல்வேறு கருத்துநிலைகளில் இருந்து யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனை என்ற ஆய்வுக்களம் அணுகப்பட்டுள்ளது. திரைப்பட இரசனையென்பது பல்வேறு படிநிலைகளிலும் அமைந்து காணப்படுகின்றது. யாழ்ப்பாணச் சூழலில் திரைப்படங்கள் அறிமுகமாகிய ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை திரைப்பட இரசனையில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. யாழ்ப்பாணத் திரைப்படக் களத்தில் இரசிகர் மன்றங்கள், நற்பணி மன்றங்கள், திரைப்பட வட்டம், திரைப்பட இயக்கங்கள் என்பன பல்வேறு காலப்பகுதிகளில் தோன்றி மறைந்துள்ளன. இவையாவும் திரைப்பட இரசனையின்பால் கொண்டிருந்த செல்வாக்குகளை வெளிக்கொண்டு வருமுகமாக இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த இவ் ஆய்வின் துணை நோக்கமானது, யாழ்ப்பாணத்தில் எழுந்திருக்கக் கூடிய திரைப்பட இரசனை என்பது திரைப்பட இரசனை தொடர்பான மாற்றுவெளிகளை முன்வைத்திருக்கின்றதா என்பதையும் ஆராயத் தலைப்பட்டிருக்கிறது. ஆய்வு முறையியலானது அளவை ஆய்வு, மற்றும் பெறுதிசார் ஆய்வு எனஇருவகையில் முன்னெடுக்கப்பட்டது. இந்த ஆய்விற்காக யாழ்ப்பாணப் பிராந்தியத்தில் வாழக்கூடிய திரைப்படத் திறனாய்வாளர்கள், திரைப்பட இரசனையாளர்கள், இரசிகர்மன்ற உறுப்பினர்களிடம் கலந்துரையாடல்கள், நேர்காணல்கள், குவிமையக் கலந்துரையாடல்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட தரவுகள் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இதன்வழி, யாழ்ப்பாணத் திரைப்பட இரசனை இயக்கங்கள் ஆரம்பம் முதலே வெகுஜன வெளியில் உருவாகவில்லை என்பதுடன் அந்த முயற்சிகள் அனைத்தும் கால ஓட்டத்தில் தோன்றியும் மறைந்தும் தற்காலிகத் தன்மையிலேயே மேலெழுந்தன என்பதும் ஆய்வின் வழியாகக் கண்டறியப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனையானது தனியாள் இரசனை முதற் கொண்டு ஒரு இயக்கமாக வரையும் வளர்ந்து வந்திருப்பினும், அது போதியளவு மக்கள் மயப்படுத்தப்படவில்லை என்பதுடன் பரவலான பொதுசனத் தளத்திற்குள் அது இயங்கவில்லை என்பதனையும் இவ் ஆய்வானது இனங்காட்டுகின்றது. யாழ்ப்பாணத்தில் நிலவும் திரைப்பட இரசனை என்பது திரைப்படங்களைப் பார்த்தல், திரைப்படங்களை இரசித்தல், திரைப்படங்களை விமர்சித்தல், திறனாய்வு செய்தல் என்ற நிலைகளையும் கடந்து அரசியல், சமூகத் தளங்களிலும் விரிவாக்கம் பெற்றிருக்கின்றது. அரசியல் ரீதியில் திரைப்பட இரசனை இயக்கம் இரசிகர்களை பிரபல்ய மற்றும் மாற்று அரசியலுக்கும் இட்டுச் சென்றுள்ளது. இவற்றோடு சமூகத்தளங்களில் மக்களை நேசித்தல், மக்களுக்கு உதவுதல் முதலிய விடயங்களோடும் திரைப்பட இரசனைசார் செயற்பாடுகள் நீடிப்பைப் பெற்றுள்ளதென்பது இந்த ஆய்வின் மூலம் வெளிக்கொண்டுவரப்பட்டுள்ளது. திரைப்பட இரசனை திரைப்படங்கள் பற்றிய, திரைப்பட உருவாக்கம் பற்றிய ஆர்வநிலையை மக்கள் மத்தியில் பரவலாக தோற்றுவித்ததோடு திரைப்படங்களைத் தனியே பார்வையிடுகின்ற நிலையையும் கடந்து திரைப்பட உருவாக்கத்தை அறிந்து கொள்வது, திரைப்பட உருவாக்கத்தில் ஈடுபடுவதற்குத் துணையாக அமைவது முதலிய வெவ்வேறு கட்டங்களை நோக்கியும் பார்வையாளர்களை நகரச் செய்திருக்கின்றதென்பது தனியாள் இரசனையின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள் -** திரைப்பட இரசனை, திரைப்பட வட்டங்கள், வெகுஜன வெளி

## I. அறிமுகம்

திரைப்படங்கள் வெறும் பொழுதுபோக்குச் சாதனங்களாக மட்டுமன்றி மிகச்சிறந்த தகவல் தொடர்புச் சாதனங்களாகவும் விளங்குகின்றன. தொடர்பாடலின் அடிப்படையில், செய்திக்கும் பெறுநருக்குமான தொடர்பின்பேரில், திரைப்பட இரசனை என்பது வெறுமனே திரைப்படத்தினைப் பார்த்துவிட்டு நன்றாக இருக்கின்றது அல்லது இல்லை என்று சொல்லிவிட்டுப் போவது கிடையாது. அவ்வாறு கூறுவது ஒரு பொழுதுபோக்கிற்காக திரைப்படத்தைப் பார்ப்பவர்களின் கருத்தாகவே இருந்துவிட்டுப் போகலாம். இதன் இரசனையானது மலிவான உணர்வு மயப்பட்ட நிலையேளு மிகையான காட்சிகள், ஊதிப் பெருக்கச் செய்த மிகை நாடகத்தன்மை, எல்லை மீறிய ஆபாசங்கள் முதலியவை பார்வையாளரின் மலிவான இரசனைக்கு விருந்தளிக்கின்றன[1].

இலங்கையைப் பொறுத்தளவில் அதுவும் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் மேலைத்தேயத் திரைப்படங்களைப் பார்த்து இரசித்த கூட்டத்தினர் ஆரம்ப காலங்களில் அதிகமாகக் காணப்பட்டனர். இதற்குக் காரணம், அக் காலப்பகுதியில் ஆங்கிலமொழி மூலமான கற்கைகளே பாடசாலைகளில் அதிகம் காணப்பட்டன. இதனால் ஆங்கில அறிவுடைய கற்றவர் சமூகம் தமது தேவை, விருப்பங்களிற்கேற்ப விமர்சன நோக்கில் திரைப்படங்களை அணுகுகின்ற தன்மை காணப்பட்டதுடன், இளைஞர்களின் விருப்பத்தின் தெரிவாக சண்டைக்காட்சிகள் கொண்ட திரைப்படங்களே அதிகம் காட்சிப்படுத்தப்பட்டன.

பொதுநோக்கில், இலங்கையில் திரைப்பட இரசனை என்பது இந்திய அயல் சினிமாவினூடே தோற்றம் பெற்றது எனலாம்[2]. இலங்கையில் திரைப்பட இரசனை என்பது பல்லின சமூக மக்கள் வாழ்கின்றமையால் திரைப்பட இரசனையும் பல்வேறு கோணங்களில், பல்வேறு வகைகளில் பல

வகையான இயல்புகளுடனும் காணப்படுகின்றது. 1929 இல் இலங்கையில் முதலாவது பேசும் படம் திரையிடப்பட்டது. 'மெலடி ஒப் லங்கா' என்ற இப்படத்தினைத் திரையிடுவதற்கு மாதன் கம்பனியே ஏற்பாடுகளைச் செய்திருந்தது. இதனடிப்படையில், 21.01.1947 ஆம் ஆண்டு முதலாவது சிங்கள மொழி திரைப்படமான 'கடவுனு பொரொந்துவ' என்னும் திரைப்படம் வெளிவந்தது. 1962ஆம் ஆண்டு 'சமுதாயம்' எனும் முழுநீளத் தமிழ்மொழியிலான திரைப்படம் உருவானது[3]. இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக குறும்படம், ஆவணப்படம் என அதன் இரசனை தற்பொழுது பரவலாக இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிந்துள்ளது[4].

இலங்கையின் வட - கிழக்குப் பகுதியில் 1975 ஆம் ஆண்டு தொடக்கம் ஈழவிடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து வந்தவேளை சாத்வீகப் போராட்டமாக காணப்பட்ட போராட்டம் சிங்களப் பெரும்பான்மை ஆட்சியாளர்களின் எல்லைமீறிய அடக்குமுறை காரணமாக ஆயுதப் போராட்டமாக மாறியது. இந்த அசாதாரண நிலைமை ஏற்படுவற்கு முன்னர் திரையரங்குகளில் திரைப்படத்தினைப் பார்க்கின்ற பார்வையாளர்களின் எண்ணிக்கை வட - கிழக்கில் அதிகமாகக் காணப்பட்டது. இருப்பினும், எக்காலப் பகுதியிலும் இலங்கையின் தென்பகுதியில் திரைப்பட வெளியீடுகள் தங்கு தடையின்றி இடம்பெற்றன. ஆனால், வட - கிழக்கில் இந்நிலை இருக்கவில்லை.

திரைப்பட இரசனையின் செல்வாக்கு விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த வன்னிப்பகுதியிலும் காணப்பட்டது. போராட்டச் சூழ்நிலையில் மக்கள் வாழ்ந்தாலும் திரைப்படத்தினைப் பார்த்து இரசிக்கும் இரசிகர் கூட்டம் சிறு பரப்பளவிலும் அதிகமாகக் காணப்பட்டனர். இங்கு தென்னிந்திய திரைப்படம், மேலைநாட்டுத் திரைப்படம், தமிழீழ விடுதலைப் போராட்டம் சார்ந்த திரைப்படங்கள் என அதன் பரப்பு விசாலமானதாகக் காணப்பட்டது. போராட்ட உணர்வினைத் தூண்டும் ஊடகமாகவும், தனித்துவமான அடையாளத்தினை தமிழ் மக்களிடம் நிலைநிறுத்தவும் திரைப்படத்தினை ஓர் பரப்புரைக் கருவியாகவும்கூட போராளிகள் பயன்படுத்தினர்.

## II. ஆய்வு முறையியல்

திரைப்பட இரசனை பல்வேறு தளங்களில், பல்வேறு நோக்குகளில், பல்வேறு இரசனைப் பிரமாணங்களில் அமைந்து காணப்படுகின்றது. அதற்குப் பல்வேறு பரிமாணங்களும் காணப்படுகின்றன. காலத்திற்குக் காலம் பல்வேறு கருத்துநிலைகளில் இருந்து திரைப்பட இரசனை அணுகப்பட்டுள்ளது. திரைப்பட இரசனையென்பது பல்வேறு படிநிலைகளிலும் அமைந்தும் காணப்படுகின்றது. ஒட்டுமொத்தத்தில் திரைப்படத்தை இரசிப்பதென்பது ஒரு சிக்கலான தோற்றப்பாடாக காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனை என்பது ஆய்வுநிலையில் நோக்கப்படுமாக இருந்தால், அது தனியாள் இரசனை என்பதாகவும், சில சமயங்களில் அது ஒரு இயக்கமாக அல்லது புலமைத்துவ மரபாகவும் பின்பற்றப்பட்டிருப்பதை அறியமுடியும். அது இன்றைய அளவில் யாழ்ப்பாணத்திற்கென்று தனியான சர்வதேசத் திரைப்பட விழா நடத்துவது வரையிலும் வளர்ந்திருக்கின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத் திரைப்பட இரசனையினை வரலாற்று ரீதியாகவும், அது என்னென்ன பரிமாணங்களைக் கொண்டும் வளர்ந்து வந்திருக்கின்றது என்பதையும் ஆராய்வது இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனை இயக்கம் அல்லது திரைப்பட இரசனைக்கான கால்கோள்கள் என்பது தனித்த ஒரு குறித்த கால வரையறைகளுக்கும் அப்பால் ஒரு நீண்ட காலப் போக்கிலும் ஆராயப்பட வேண்டியுள்ளது.

குறித்த இவ் ஆய்வின் துணை நோக்கமானது, யாழ்ப்பாணத்தில் எழுந்திருக்கக் கூடிய திரைப்பட இரசனை என்பது திரைப்பட இரசனை தொடர்பான மாற்று வெளிகளை முன்வைத்திருக்கின்றதா? என்பதை ஆராய்தலாக அமைகின்றது.

யாழ்ப்பாணம் ஏதோ ஒரு வகையில், தொடக்க காலங்களில் இருந்து தமிழ் மக்களுடைய வாழ்வியலின் மையப்புள்ளியாகவும் இயங்கு நிலையாகவும் இருந்து வந்திருக்கின்றது. குறிப்பாக, இலங்கைத் தீவில் வாழக்கூடிய தமிழ் மக்களுடைய எண்ண ஓட்டங்களைப் பிரதிபலிக்கின்ற தளமாகவும் யாழ்ப்பாணம் பல்வேறு சமயங்களில் அடையாளம் காணப்பட்டிருக்கின்றது. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனையை ஆய்வுக் களமாகக் கொண்டு ஆய்வு செய்வதென்பது, தீவில் வாழக்கூடிய தமிழ் மக்களுடைய திரைப்பட இரசனையின் போக்கினை ஆய்வு செய்வதில் கணிசமான பங்கென அமைவதுமாகிறது.

இங்கு ஆய்வுக் களத்தின் கூறுகளாக திரைப்பட இரசனை இயக்கங்கள், அவற்றுக்கான கால்கோள்கள், இரசனை மாற்றங்கள், நிறுவன முயற்சி, குழு முயற்சி, தனியாள் வெளிப்பாடு முதலியன ஆய்விற்குட்படுத்தப்படுகின்றன. இதற்காக, அளவை ஆய்வு இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்து திரைப்பட இரசனை இயக்கங்களின் பண்புகள் மற்றும் அவற்றின் உருவாக்கத்திற்கான காரணங்கள் முதலியவற்றைக் கண்டறிய இது அனுசரணையாக அமைந்தது.

இந்த ஆய்வில் திரைப்பட இரசனையாளர்கள், இரசிகர்மன்ற உறுப்பினர்கள், திரைப்படத் திறனாய்வாளர்கள், விமர்சகர்கள் முதலானவர் களிடமிருந்து நேர்காணல்கள், குவிமையக் கலந்துரை யாடல்கள் மூலம் தகவல்கள் திரட்டப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனையாளர்கள், இரசனை இயக்கங்களைச் சேர்ந்தோர், இரசிகர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோரை முழுமையாக இனங்கண்டு ஆய்விற்கு உட்படுத்துவது கடினமான விடயமாகும். இதனால் இந்த ஆய்வின் மாதிரி வடிவமைப்பில் "இயல்தகைமை மாதிரி" தெரிவு செய்யப்பட்டது. ஏற்கனவே குறிப்பிட்டது போல பருத்தித்துறை, குருநகர் பிரதேசங்களைச் சேர்ந்த திரைப்பட இரசனையாளர் குழுக்கள் மற்றும் இரசிகர் மன்ற உறுப்பினர்களுடன் குவிமையக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு, அவை மூலம் தகவல்கள் பெறப்பட்டன. திரைப்படத் திறனாய்வாளர்கள், திரைப்பட இரசனை இயக்கத்தை சேர்ந்த திரைப்பட இரசனையாளர்கள் திரைப்பட இரசிகர் மன்ற உறுப்பினர்கள், திரையரங்கு உரிமையாளர்கள் முதலியோரை மாதிரிகளாகத் தெரிவு செய்து நேரடி நேர்காணல் வழியாகவும் தரவுகள் திரட்டப்பட்டன.

அவதானிப்பு முறை வழியாக, குறித்த இவ் ஆய்வில் ஆய்வாளனால் திரையரங்கிற்கு நேரடியாகச் சென்றும் தற்கால இரசிகர்களுடன் ஒன்றாக பழகியும் அவர்களின் நடத்தைகளை அவதானித்தும் தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு அவையும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இரண்டாம் நிலை தரவுகளை திரட்டும் மூலங்களாக திரைப்பட இரசனை சார்ந்த நூல்கள், சஞ்சிகைகள், அறிக்கைகள், கட்டுரைகள், ஆய்வுக்கட்டுரைகள் முதலியன பயன்படுத்தப்பட்டன.


**III. ஆய்வுப் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்**

"யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனை இயக்கம்" என்ற ஆய்வின் பிரகாரம் கீழ்வரும் விடயங்கள் ஆய்வின் முடிவுகளாக கலந்துரையாடல்வழி இனங்காணப்பட்டன.

**யாழ்ப்பாணத்துப் பிரதேசரீதியான திரைப்பட இரசனையின் தோற்றம்**

ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனையானது, திரைப்படம் பார்ப்பதும் கதை பகிர்வதுமான இரசனையே என ஓர் குறுகிய வட்டத்திற்குள்ளூ திரைப்பட இரசனையின் தொடக்கப்புள்ளியாக இனங்காணப்பட்டது.

**இரசனையாளரின் பல்வகைத் தன்மை**



யாழ்ப்பாணத் திரைப்பட இரசனை இயக்கங்களின் பல் பரிமாண வளர்ச்சிகள், அவற்றின் போக்குக்களை வரைபடம் - 1 காட்டுவதுபோல, ஓர் கருத்து நிலைச் சட்டகத்தில் உள்ளடக்கிக் கொள்ள முடியும். யாழ்ப்பாணத் திரைப்பட இரசனையின் போக்குக்களை ஆரம்பகாலப் போக்கு, இடைக்காலப் போக்கு, தற்காலப் போக்கு என மூன்று பகுதிகளூடாக நோக்க முடியும். திரைப்பட இரசனை என்பது திரையரங்குகள், இரசனை வளர்ச்சி, இரசிகர் மன்றம், திரைப்பட இரசனைக் குழுமம் என்னும் பிரிவுகளாப் பகுத்தும் நோக்கப்படும்.

தற்காலத்தில் திரைப்படப் பார்வையாளரில் பல்பரிமாண வளர்ச்சி காணப்பட்டாலும் ஆரம்ப காலம், இடைக்காலத்துடன் ஒப்பிடும்போது திரையரங்குகளிற்கு குடும்பமாகச் சென்று திரைப்படம் பார்க்கின்ற தன்மை யாழ்ப்பாணத்தில் தற்பொழுது வழக்கொழிந்து போகின்றமை ஆய்வின்வழி கண்டறியப்பட்டது.

ஆரம்ப காலத்தில் நாடகங்களில் இருந்து இசைப்பாடல்களோடும், வசனங்களோடும் எதுவித மாற்றங்களும் இல்லாமல் திரைப்படங்கள் உருவாக்கப்பட்டன. அக்காலப் பகுதியில் திரைப்படங்களைப் பார்த்த யாழ்ப்பாணத்து இரசனையாளர்களின் தன்மை திரைப்படத்தைப் பார்த்து மகிழ்கின்ற தனியாள் இரசனையாகவே காணப்பட்டது. இது தற்காலத்திலும் தொடர்கின்றது என்பது இவ் ஆய்வின் ஊடாகக் கண்டறியப்பட்டது. குறிப்பாக, திரை இசை குறித்த இரசனை யாழ்ப்பபாணத் திரைப்படக் களத்தில் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை தனியாள் இரசனையாக அதிகம் காணப்படுவதை இங்கு குறிப்பிடலாம்.

அதேபோன்று, வசனங்களைக் கேட்பதற்காகவும், வசனம் வெளிக்கொண்டு வரும் காட்சிகளைப் பார்ப்பதற்காகவும் பல திரைப்படங்கள் யாழ்ப்பாணத்தில் நூறு நாட்கள் கடந்தும் திரையில் வெற்றிகரமாக ஓடியிருக்கின்றன. நடிகர் எம்.ஜி.ஆர் நடித்த திரைப்படங்களான மகாதேவி, மன்னாதிமன்னன், மலைக்கள்ளன், அரசிளங்குமாரி முதலிய திரைப்படங்களும் மற்றும் சிவாஜி கணேசன் நடித்து வெளிவந்த பாசமலர், வீரபாண்டியன் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் முதலிய திரைப்படங்களும் வசனத்திற்காக யாழ்ப்பாணத்தில் ஏராளமான இரசிகர்கள் பார்த்து இரசித்த திரைப்படங்களாக அமைந்தன.

‘ஏழிசை வேந்தர்’ எம்.கே.தியாகராஜபாகவதர் காலம் தொடக்கம் தற்காலத்தில் நடிகர் விஜய் சேதுபதி வரையிலும் திரைப்பட நடிகர்கள் குறித்த இரசனையும் யாழ்ப்பாணத் திரைப்படக் களத்தில் காணப்படுகிறது.

இவை அனைத்தும் தனியாள் இரசனையாகவும் குழு இரசனையாகவும் காணப்பட்டுள்ளதென்பது ஆய்வாளனால் கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனையின் வெளிப்பாடுகளில் இயக்குநர் குறித்த இரசனை ஆரம்பகாலம் தொடக்கம் இன்றுவரை காணப்படுகின்றது. இயக்குநர்களுக்காக திரைப்படம் பார்க்ககின்ற கூட்டம் யாழ்ப்பாணத்தில் காணப்பட்டுள்ளது என்பது இன்றுவரை அவதானிக்கப்படும் ஒரு விடயமாகும்.

தரமான, அழகியல்சார்ந்த தென்னிந்தியத் திரைப்படங்களையும். பிறமொழிப் படங்களையும் பார்க்கும் வாய்ப்பினை ஏற்படுத்துவதன் மூலம் திரைப்பட இரசனையைக் கூர்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும், மாற்றுச் சினிமா இரசனையை சமூகத்திற்கு ஏற்றவகையில் உருவாக்குவதற்காகவும் பல்வேறு திரைப்பட இரசனை இயக்கங்கள் யாழ்ப்பாணத்தைத் தளமாகக் கொண்டு குழுசார் இரசனையையும் குறிப்பிடத்தக்க அளவில் வளர்த்தெடுத்து வந்துள்ளன. இவற்றில் வணிக சினிமாக்கள் சார்ந்த போரீப்பு அதிகம் இருந்திருக்கவில்லை. இயங்கு நிலைகள் சார்ந்தும், அவற்றின் தொடர் இயக்கம் தொடர்பிலும் கருத்திற்கொள்ளும்போது, இவற்றில் பெரும்பாலானவை வரையறைக்குட்பட்டவையாக, தொடர்ந்து இயங்க முடியாத சூழலே பெரிதும் காணப்பட்டது. எனினும், இவை யாழ்ப்பாண திரைப்பட இரசனைத் தளத்தில் கணிசமான மாற்றங்களை உருவாக்கியிருந்தன என்பது மறுப்பதற்கில்லை.

‘யாழ். திரைப்பட வட்டம்’ 3.2.1979 முதல் 5.2.1982 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்துள்ளது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த திரைப்படங்கள் யாழ் றிம்மர் மண்டபத்தில் யாழ். திரைப்பட வட்ட உறுப்பினர்களுக்கு காண்பிக்கப்பட்டன. புகழ்பூத்த ஆங்கில ஆசான், திறனாய்வாளர், ஊடகவியலாளர் ஏ.ஜே.கனகரத்தினா யாழ். திரைப்பட வட்டத் தலைவராகச் செயற்பட்டார்.

உலகப் புகழ்பெற்ற நெறியாளர் பலரின் புகழ்பெற்ற திரைப்படப் படைப்புக்களுடன் பரிச்சயப்படும் வாய்ப்பினை இவ்வட்டம் யாழ்ப்பாண இரசிகர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தது.

'புறநிலைப்படிப்புக்கள் அலகின் திரைப்பட வட்டம்' 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பறநிலைப் படிப்பின் அலகின் ஓர் பகுதியாக, பேராசிரியர். இரா. சிவச்சந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

நூற்றுக்கு மேற்பட்டோர் வார இறுதி நாட்களில் ஒன்றுகூடி நேர்ச் சிந்தனைகளைத் தோற்றுவிக்கும் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டு பார்வையாளர் களிடம் பின்னூட்டம் அறியப்பட்டது. புறநிலைப்படிப் புக்கள் அலகின் திரைப்பட வட்டத்தின் முதன்மை நோக்கங்களாக, சமூக அக்கறையின் முக்கியத்துவத்தை மக்களிடம் ஏற்படுத்த நல்ல திரைப்படங்களைக் கருவியாகக் கையாளுதல், கலைப்படைப்புக்களை புரிந்துகொள்ளுதல், மாற்றுத் திரைப்படக் களத்தை உருவாக்க முனைதல், பார்வையாளர்களைச் சீரிய இரசனையின் பக்கம் ஈர்த்தல் என்பன முதன்மைப்படுத்தப்பட்டன. இங்கு தென்னிந்தியத் திரைப்படங்கள், வேற்றுமொழித் திரைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. இதன் இயக்கம் பின்னாளில் கல்வி நிர்வாகச் செயன்முறையால், யாழ். பல்கலைக்கழக மண்டபங்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாக இடையில் நின்றுபோனது.

'சலனச் சித்திர திரைப்பட இரசனை இயக்கம்', 2001ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டுவரை யாழ்பபாணத்தில் இயங்கியது. இதன் நிறுவுனராக பி.தேவதாஸ் காணப்பட்டார். சலனச் சித்திர திரைப்பட இரசனை இயக்கத்தின் பிரதான நோக்கஙகளாக, நல்ல திரைப்படங்கள் எவை என்பதை மக்களுக்கு எடுத்துக்கூறி திரைப்படங்களைப் பார்க்கத் தூ ண்டுதல், ஒரு திரைப்படத்தினை எவ்வாறு பார்க்க வேண்டும், எவ்வாறு திரைப்படத்தினை உருவாக்கிக் கொள்ளல் என்பவை தொடர்பான அறிவினை மக்களிற்கு வழங்குதல், உள்ளூர் திரைப்படப் படைப்புக்களையும் திரைக்கலைஞர்களையும் உருவாக்குதல், உலகத் திரைப்படக் களத்திற்கு ஈழத்துத் தமிழ் திரைப்படங்கள், குறும்படங்கள், ஆவணப்படங்களைக் கொண்டு செல்லல் முதலியனவாக அமைந்திருந்தன. திரைப்பட இரசனை வெளிப்பாடுகளை யாழ்ப்பாண மக்களிடம் ஏற்படுத்துவதற்கு சிறந்த பங்களிப்பை சலனச் சித்திரம் திரைப்பட இரசனை இயக்கம் மேற்கொண்டு வந்தமை அறியப்பட்டுள்ளது. இருப்பினும், இதன் இருப்பும் யுத்தச் சூழ்நிலை காரணமாக நான்கு வருடங்களுடன் முடிவுக்கு வந்தது.

'ஸ்கிறிப்ட் நெற்' (Script Net) - எனும் திரைப்பட உருவாக்க இயக்கம் 2009ஆம் ஆண்டு தோற்றம் பெற்றிருந்தமையையும் யாழ்ப்பாணத் திரைப்பட இரசனையின் ஓர் வளர்ச்சிநிலையாக எடுத்துக்கூற முடியும்.யாழ்ப்பாணத்தில்திரைப்படஉருவாக்கத்தினை மேற்கொள்வதற்காக திரைப்படங்கள் சார்ந்த அதன் உருவாக்க முறைமைகள், தொழில்நுட்பங்கள் முதலிய விடயங்கள் இளைய சமூகத்தினருக்கு கற்றுக்கொடுக்கும் நோக்கோடு க. ஞானதாஸ் தலைமையில் 'ஸ்கிறிப்ட் நெற்' வினைத்திறனுடன் இயங்கியதுளூ பல உள்ளூர் படைப்புக்களுக்கும் நிலைக்களமானது. இதன் இயங்குநிலையும் யுத்தச் சூழ்நிலை மற்றும் பயனாளர்களின் ஆர்வமின்மை காரணமாக தொடராமற் போனது.

'சிந்தனைக் கூடம்' - பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் இதன் நிறுவுனராகக் காணப்படுகின்றார். 2009ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை (2018) இயங்கிவரும் அமைப்பாக இது காணப்படுகின்றது. ஒவ்வொரு சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் முற்போக்கு சிந்தனையுடைய கலா இரசனை கொண்ட திரைப்படங்கள் திரையிடப்படுகின்றன. சிந்தனைக் கூடத்தின் பார்வையாளர்களின் எண்ணிக்கை இன்றுவரை கூடவும் குறையவும் என்றில்லாது தொடர்ந்துவருகின்றது.

'கரவொலி' - ஈழத்துத் தமிழ்த் திரைப்பட வெளியை விசாலமாக்குவதற்காகவும், புதிய திரைப்படப் படைப்புக்களை உருவாக்கவும், உருவாக்கப்படும் படைப்புக்களை வெளியுலகிற்குக் கொண்டுவருவதற்காகவும், மாற்றுத் திரைப்படக் களத்தை உருவாக்கவும் கரவொலி எனும் இணையத்தளம் இயங்கி வருகின்றது. இது இணைய இதழையும் வெளியிடுகின்றது. 2016 ஆம் ஆண்டு இது தொடங்கப்பட்டது.

'நிகழ்ப்படக் குழுமம்' - 2017ஆம் ஆண்டு ஆரம்பங்களில் தொடங்கப்பட்டு இன்றுவரை இயங்கிவருகின்றது. இன்று யாழ்ப்பாணத்தில் நிகழ்ப்படக் குழுமத்தினர் மாதத்திற்கு இரண்டு தடவைகள் திரைப்படங்களை அகலத்திரையில்

காட்சிப்படுத்துகின்றார்கள். நிகழ்ப்படக் குழுமத்தில் உள்ள உறுப்பினர்கள் குறிப்பாகத் தன்னார்வ இளைஞர்கள் மக்களிடம் சென்று "நல்ல திரைப்படங்களை அறிமுகப்படுத்தல்" என்னும் தொனிப்பொருளில் இயங்கிவருகின்றனர்.

யாழ்ப்பாணத் திரைப்பட இரசனை இயக்கங்கள் பெரும்பாலும் கண்ணுக்குப் புலப்படாத இரசனை சார்ந்த மாற்றங்களையே உருவாக்கி இருக்கின்றன. இவற்றின் பிரதிபலிப்பை ஏனைய கலை, இலக்கிய செயற்பாட்டின் இயக்கமான யாழ். பொதுநூலக வாசகர் வட்டத்திலும் அவதானிக்க முடிந்துள்ளது. யாழ்ப்பாணத் திரைப்பட இரசனை இயக்கத்தின் புதிய வடிவமாக, முகநூல் குழுமங்கள் ஊடாக புதிய, பல்வேறு மொழித் திரைப்படங்களின் அறிமுகங்கள், விமர்சனக் குறிப்புக்கள் எழுதப்படுகின்றன. திரைப்படங்களை விவாதிக்க 'திரைரசம்', 'புதியலயம்' என முகநூல் குழுமங்கள் பிரசித்தமானவையாக உள்ளன. இவற்றில் பங்குபற்றுவோரில் பெரும்பாலானோர் திரைப்படம் மீது ஏதோவொரு விதத்தில் முற்பரீட்சயம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இயல்பிலேயே தேடலுக்கான ஆர்வமுடையவர்களாக அவர்கள் காணப்படுவதனை முகநூல் அவதானிப்பு மூலம் இனங்காண முடிந்துள்ளது.

யாழ்ப்பாணத் திரைப்பட இரசனையின் சீரான தன்மையைப் பேணவும் திரைப்பட இரசனையின் உந்துதலாலும் திரைப்பட உருவாக்கம்சார் படைப்புக்கள் வெளிவந்தாலும் அவை ஆரம்பத்தில் தாம் வாழும் சூழல் சார்ந்த இரசனையை வெளிக்கொண்டு வருவதாக இருந்ததுடன், அவற்றின் தற்காலப் போக்கானது தென்னிந்திய திரைப்படங்களின் உருவாக்கத்தை ஒத்ததாகவே மாற்றமடைவதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றையும் கடந்து, தற்பொழுது யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா 2015 ஆம் ஆண்டு தொடக்கம் வருடாவருடம் நடைபெற்று வருகின்றது. இது உள்ளூர் படைப்பாளிகளுக்கு களமமைத்துக் கொடுப்பதுடன், யாழ்ப்பாணத் திரைப்பட இரசனையை சர்வதேச போக்குகளுடன் ஒப்பிட்டு நோக்கவும் வழிசமைத்திருக்கிறது.

## IV. ஆய்வு முடிவுகள்

யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனையானது பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருக்கின்றது. தனியாள் இரசனை முதற்கொண்டு ஒரு இயக்கமாகவும் அது வளர்ந்து வந்திருக்கின்றது. பல முனைப்புக்கள் காலத்திற்குக் காலம் நடைபெற்றிருப்பினும், அம்முனைப்பு போதியளவு மக்கள் மயப்படுத்தவில்லை என்பதுடன் பரவலான பொதுசனத் தளத்திற்குள் இயக்கம் பெறுவதாகவும் அது அமையவில்லை. போர்ச் சூழல், கிரமமான பார்வையாளர்களின் வரவின்மை, திரையிடுவதற்கான இடங்கள் சீரின்மை, போதியளவு தொழில்நுட்பப் பயன்பாடின்மை, திரைப்பட வட்டங்களைக் கொண்டு நடத்துவதற்கு ஒரு சிலரின் தனிப்பட்ட முயற்சிகள் மாத்திரம் காணப்பட்டமை, பரவலாக இவற்றை ஏற்று முன்னெடுத்துச் செல்ல அடுத்தடுத்த தலைமுறையினர் முன்வராமை முதலிய காரணங்களால் யாழ்ப்பாணத்தில் திரைப்பட இரசனை இயக்கம் ஒரு குறிக்கப்பட்ட பரப்பிற்குள் நின்றுபோனதாகக் காணப்படுகின்றது.

எதிர்கால ஆய்வுகளுக்கான பரிந்துரைகளைப் பொறுத்தளவில், யாழ்ப்பாணத்தில் தனித்தனிப் பிரதேச ரீதியிலான திரைப்பட இரசனை இயக்கங்கள், கிழக்கு மாகாணம், மலையகம், கொழும்பு முதலிய பகுதிகளில் பல்வேறு காலகட்டங்களில் திரைப்பட இரசனை வளர்ந்துள்ள முறைமை, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் திரைப்பட இரசனை ஆகிய ஆய்வுகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படுமாக இருந்தால் அவை இந்த ஆய்வுப்பரப்பை இன்னும் வளம்பெறச்செய்யும் என நம்பலாம்.

### உசாத்துணை

1. யேசுராசா,அ.,"திரையும் அரங்கும் -கலைவெளி ஒரு பயணம்", துர்கா பதிப்பகம், யாழ்ப்பாணம், 2013.
2. சிவகுமாரன், கே.எஸ்., "அசையும் படிமங்கள்", மீரா பதிப்பகம், கொழும்பு-06, 2001.
3. தேவதாஸ். தம்பிஐயா., "இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை" வி.எஸ். துரைராஜா பதிப்பகம், கொழும்பு, 1994.
4. அம்'ன் குமார், "சினிமா இரசனை", சொல் ஏர் பதிப்பகம், சென்னை, இந்தியா, 2012.